RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-10 | 10 ஜனவரி | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## லாஸ் ஏஞ்சல்ஸ் காட்டுத் தீக்கு 5 பேர் பலி அச்சுறுத்தலில் ஹாலிவுட் அடையாளச் சின்னங்கள்

லால் ஏஞ்சல்ஸ், ஜன.10

லாஸ் ஏஞ்சல்ஸ் முழுவதும் கட்டுப்பாடு இல்லாமல் பரவி வரும் காட்டுத்தீக்கு 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

லாஸ் ஏஞ்சல்ஸ் தீயணைப் புத்துறையின் கூற்றுப்படி, சன்செட் தீ தற்போது 20 ஏக்கர் வரை பரவியுள்ளது. மேலும் அது ரன்யான் கன்யோன் முதல் வாட்டலஸ் பார்க் இடையேயான பகுதியை எரித்து நாசமாக்கியுள்ளது. ஹாலிவுட் அடையாளத்தை தவிர்த்து, ஆண்டு தோறும் ஆஸ்கார் விருதுகள் வழங்கும் விழா நடைபெறும் டோல்பி தியேட்டரும் சன்செட் தீ தாக்கும் அபாயத்தில் உள்ளது. அதே போல் ஹாலிவுட்டன் பிற அடையாளங்களான, ஹாலிவுட் பவுல் வெளிப்புற ஆம்பிதியேட்டர் மற்றும் ஹாலிவுட் வாக் ஆஃப் ஃபேம் போன்றவையும் தீ தாக்கும் அபாயத்தில் உள்ளன.

லாஸ் ஏஞ்சல்ஸுக்கு மேற்கே பாலிசேட்ஸ் தீ விபத்து பகுதிக்கு அருகே உள்ளவர்களும் வெளியேறும் படி உத்தரவிடப் பட்டுள்ளது. அதேபோல், ஹர்ஸ்ட் தீ விபத்துக்கு அருகில் உள்ள சான் ஃபெர்னான்டோ பள்ளத்தாக்கில் உள்ளவர்களும் தங்களின் வீடுகளை விட்டு வெளியேற உத்தரவிடப் பட்டுள்ளது. ஈட்டன் தீ விபத்து காரணமாக சாண்டா மோனிகா மற்றும் அல்டாடேனாவின் சில பகுதிகளிலும் மக்கள் வெளியேற்ற உத்தரவு பிறப் பிக்கப்பட்டிருந்தது.

லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் அதன்



அருகிலிருக்கும் வென்டியுரா கவுன்டியிலும் தற்போது ஆறு இடங்களில் காட்டுத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதிகாரிகளின் கூற்றுப்படி, உட்லி தீ கொஞ்சம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள காட்டுத்தீ துளியும் கட்டுப்படுத்தப்படவில்லை

செவ்வாய்க்கிழமையில் உருவான பாலிசேட்ஸ் தீ விபத்தே முதலில் உருவானது, இது லாஸ் ஏஞ்சல்ஸ் வரலாற்றில் மிகவும் மோசனமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரமின்றி தவிப்பு: காட்டுத்தீ காரணமாக தங்களின் உடமைகளை விட்டு விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை சுமார் 1,37,000 பேர். இதனிடையே தெற்கு கலிபோர்னியாவில் உள்ள சுமார் 17 மில்லியன் மக்கள் வியாழக்கிழமை வரை புகை மண்டலம் மற்றும் துசுகளில் வசிக்கவேண்டியது இருக்கும் எனக்கூறப்படுகிறது.

புதன்கிழமை மதிய தகவலின் படி, 1.5 மல்லியன் மக்கள் மின்சாரம் இல்லாமல் தவித்து வருவதாக PowerOutage.us தெரிவித்துள்ளது. அதேபோல், வெண்டியுரா கவுன்டியில் சுமார் 3,34,000 மக்களும், லாஸ் ஏஞ்சல்ஸ் கவுன்டியில் 9,57,000 பேரும் மின்சாரமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

பில்லி கிரிஸ்டல், மாண்டி மூரே, ஜேமியி லீ கர்டிஸ் மற்றும் பாரிஸ் ஹில்டன் உள்ளிட்ட பல ஹாலிவுட் பிரபலங்களும் இந்தக் காட்டுத்தீ காரணமாக தங்களின் உடைமைகளை இழந்துள்ளனர். அதேபோல், ஆடம் சாண்ட்லர், பென் அஃப்லெக், டாம் ஹான்க்ஸ் மற்றும் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் போன்றோரின் வீடுகளும் காட்டுத்தீ பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ளன.

செவ்வாய்க்கிழமை பாலிசேட்ஸில் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து கலிபோர்னியா மாநில கவர்னர் அவசர நிலையை அறிவித்திருந்தார்.

ஜோ பைடன் மீது ட்ரம்ப் தாக்கு: அமெரிக்க அதிபர் ஜோ பைடனும், கலிபோர்னியா ஆளுநரும் காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த தவறி விட்டனர் என்று புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் சாடியுள்ளார். ஜனவரி 20ம் தேதி பதவியேற்க உள்ள ட்ரம்ப், தற்போதைய காட்டுத்தீ பிரச்சினையை எதிர்த்து போராடுவதற்கு தேவையான ஆதாரங்களின்றி ஜோ பைடன் தன்னை விட்டுச் செல்வதாக குற்றஞ்சாட்டியுள்ளார். இதுகுறித்து தனது சமூக வலைதளமான ட்ரூத் சோசியலில் ட்ரம்ப் கூறுகையில், "தீயணைப்பு இயந்திரங்களில் தண்ணீர் இல்லை, திணிவிகிவில் பணம் இல்லை. இதைத் தான் ஜோ பைடன் எனக்கு விட்டுச்செல்கிறார். நன்றி ஜோ!" என்று தெரிவித்துள்ளார்.

## தேனியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கிய மாவட்ட ஆட்சியர் - நாடாளுமன்ற உறுப்பினர்

தேனி ஜன10

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சிகுட்பட்ட வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க நியாயவிலைக்கடையில், மாவட்ட ஆட்சியர் ஆர்.வி. ஷஜீவனா, தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் முன்னிலையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்புடன் கூடிய பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் இலவச வேஷ்டி சேலைகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் பேசியதாவது,

தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை சிறப்பாகக் கொண்டாடுவதற்காக அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசாக தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக் கரும்புடன் கூடிய தொகுப்பு மற்றும் இலவச வேஷ்டி சேலைகள் வழங்க தமிழ்நாடு அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து நியாய



விலைக் கடைகள் மூலமாக 13.01.2025 வரை பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 517 நியாய விலைக் கடைகள் மூலமாக மொத்தம் 4,27,055 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் இலவச வேஷ்டி சேலைகள் வழங்கப்பட உள்ளது.

டோக்கனில் குறிப்பிட்டுள்ள நாளில், குடும்ப அட்டையில் உள்ள குடும்ப உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர் நியாயவிலைக் கடைக்குச் சென்று பொங்கல் பரிசுத் தொகுப்பினைப் பெற்றுக்கொள்ளலாம். டோக்கனில் குறிப்பிட்ட நாளில் பெற இயலாதவர்கள் 13.01.2025 அன்று பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற்ற பயனாளிகள் தெரிவித்ததாவது, என் பெயர் வனிதா. இப்பொங்கல் பரிசு தொகுப்பு எனது குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். இதனை வழங்கிய முதலமைச்சருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ஜெயபாரதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஆரோக்கியசுகுமார், தேனி அல்லிநகரம் நகர்மன்றத் தலைவர் ரேணுப்பிரியா பாலமுருகன், நகர்மன்ற துணைத் தலைவர் செல்வம், திட்டக்குழு உறுப்பினர் நாராயண பாண்டியன், மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) வளர்மதி, வட்டாட்சியர் சதிஷ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பொங்கல் பண்டிகை: மகளிர் உரிமைத் தொகையை வங்கிக் கணக்கில் செலுத்த முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஜன.10

பொங்கல் திருநாளையொட்டி 1 கோடியே 14 லட்சத்து 61 ஆயிரம் மகளிருக்கும் மகளிர் உரிமைத் தொகையை (ஜன.9) வழங்கிட தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தமிழக மக்களிடம் குறிப்பாக பெண்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்திலுள்ள தகுதி வாய்ந்த 1 கோடியே 14 லட்சத்து



61 ஆயிரம் பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் அவரவர் வங்கி கணக்குகளில் ரூ.1000 வரவு வைக்கப்படுகிறது.

எதிர்வரும் பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 1000 ரூபாயினை முன்கூட்டியே வழங்கிட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (ஜன.9) உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவின் மூலம் பயன்பெறும் 1 கோடியே 14 லட்சத்து 61 ஆயிரம் பெண்களின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கும் பணிகள் வியாழக்கிழமை காலை முதலே தொடங்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் இன்று அவர்களின் வங்கி கணக்குகளில் ரூ.1000 வரவுவைக்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக மகளிர் உரிமைத் தொகை ஒவ்வொரு மாதமும் 15ம் தேதி வாக்கில் வங்கி கணக்கில் வரவுவைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்பதி துயரம்: முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டோர் இரங்கல்

புதுடெல்லி, ஜன.10

திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி தமிழகத்தை சேர்ந்த இருவர் உட்பட ஆறு பேர் உயிரிழந்த நிலையில், இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின்: இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப்பதிவில், "திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட அப்பாவி உயிர்கள் பலியாகியுள்ள துயர நிகழ்வை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன். இந்தச் சோகச் சம்பவத்தில் உற்றாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற விழைகிறேன்" என தெரிவித்துள்ளார்.

முதல்வர் சந்திரபாபு நாயுடு: ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வெளியிட்டுள்ள பதிவில், "திருப்பதியில் உள்ள விஷ்ணுவின் இல்லம் அருகே திருமலை ஸ்ரீவாரி வைகுண்ட துவார தரிசனத்திற்கான டோக்கன்கள் தொடர்பாக ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பல பக்தர்கள் உயிரிழந்த சம்பவம் பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. பக்தர்கள் டோக்கன்களைப் பெற அதிக எண்ணிக்கையில் கூடியிருந்த நேரத்தில் நடந்த இந்த துயர சம்பவம் என்னை மிகவும் பாதித்தது. சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக கிடைத்த தகவலை



அடுத்து, உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று நிவாரண நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிட்டுள்ளேன். காயமடைந்தவர்களுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்து அவர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும். நான் தொடர்ந்து மாவட்ட மற்றும் திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகளுடன் பேசி வருகிறேன்" என தெரிவித்துள்ளார்.

செல்வப்பெருந்தகை: திருப்பதி ஏழுமலையான் கோவிலில், வெள்ளிக்கிழமை நடைபெறும் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் தரிசனத்தில் கலந்து கொள்ள திருப்பதி சீனிவாசம் தங்கும் விடுதி வளாகத்தில் உள்ள கவுண்டர்களில் இலவச தரிசன டோக்கன் வாங்குவதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் குவிந்ததால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி சேலத்தைச் சேர்ந்த பெண் உட்பட 6 பக்தர்கள் பலியாகியிருக்கிற சம்பவம் நெஞ்சை உலுக்குவதாக இருக்கிறது. மேலும் 30 பக்தர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் 1 லட்சத்து 20 ஆயிரம் டோக்கன்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருந்தது. ஆனால், பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள கவுண்டரில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் கூடுவதை தடுக்க காவல்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. லட்சக்கணக்கில் இலவச டோக்கன்கள் வழங்கும் போது நிறைய கவுண்டர்களை திறந்து ஒரே இடத்தில் பக்தர்கள் குவியாமல் தடுக்கிற பொறுப்பு திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்திற்கு இருக்கிறது. அந்த பொறுப்பை காவல்துறையினரின் ஒத்துழைப்போடு சரிவர நிர்வகிக்காத காரணத்தினால் ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு சென்றதினால் 6 பேர் பலியான இக்கோர சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

பொதுவாக, இலவசங்களை வழங்கும் போது மக்கள் நெரிசலில் சிக்கி இத்தகைய கோர சம்பவங்கள் ஏற்கனவே நிறைய நடந்திருக்கின்றன. அதிலிருந்து படிப்பினையை பெற்று கோர சம்பவங்கள் நிகழாமல் தடுக்க உரிய நடவடிக்கையை திருமலை திருப்பதி தேவஸ்தானம் உரிய முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏன் எடுக்கவில்லை என்று தெரியவில்லை. இதுகுறித்து ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபுநாயுடு விசாரணை நடத்தி 6 பேர் பலியான சம்பவத்திற்கு உரிய காரணத்தை அறிய முற்பட வேண்டும்.

விபத்தில் பலியானவர்களுக்கு தலா ரூபாய் 25 லட்சம் ஆந்திர மாநில அரசு இழப்பீடு வழங்க வேண்டுமெனவும், காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

டிடிவி தினகரன்: அம்மா மக்கள் முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள பதிவில், "திருப்பதியில் சொர்க்க வாசல் தரிசனத்திற்கான டோக்கன் வழங்கும் நிகழ்வில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி தமிழகத்தைச் சேர்ந்த இருவர் உட்பட 6 பேர் உயிரிழந்திருப்பதாக வெளியாகியிருக்கும் செய்தி மிகுந்த வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கிறது. துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, மூச்சுத்திணறல் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அனைவரும் பூரண குணமடைந்து விரைவில் வீடு திரும்ப எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

## அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான பெண் காவல் ஆய்வாளர் பணியிடை நீக்கம்: ஆணையர் நடவடிக்கை

சென்னை, ஜன.10

அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கை முறையாக விசாரிக்காத பெண் காவல் ஆய்வாளர் ராஜி கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அவரை காவல் ஆணையர் அருண் பணியிடை நீக்கம் செய்துள்ளார்.

சென்னை அண்ணா நகரைச் சேர்ந்த 10 வயது சிறுமியை தண்ணீர் கேன் விற்பனை (சப்ளை) செய்யும் இளைஞர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்ததாக பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் அண்ணா நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த ஆகஸ்ட்டில் புகார் அளித்தனர். அப்போது, சம்பந்தப்பட்ட இளைஞரின் பெயரை புகாரிலிருந்து நீக்கக் கோரி காவல் ஆய்வாளர் ராஜி உள்ளிட்ட போலீஸார், அவர்களை தரக்குறைவாக பேசியதோடு, தாக்கவும் செய்ததாக தகவல் வெளியானது.

இது தொடர்பான காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவியது. மேலும், சிறுமி போலீ



ஸாரிடம் அளித்த வாக்குமூல ஆடியோவும் வெளியாகி அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது.

அதேபோல, தனது மகளுக்கும், தங்களுக்கும் பாதுகாப்பு வழங்கக் கோரி சிறுமியின் தாயாரும் தனியாக உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இதுகுறித்து விசாரணை மேற்கொண்ட உயர் நீதிமன்றம் வழக்கு விசாரணையை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டது.

இதனையடுத்து, சிபிஐ விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அதன்படி உச்ச நீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்ததோடு, தமிழகத்தில் பணியாற்றும் வேறு மாநில ஐபிஎஸ் அதிகாரிகள் 7 பேர் கொண்ட சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து விசாரிக்க உத்தரவிட்டது.

அதன்படி, தமிழகத்தைச் சேர்ந்த டிஐஜி சரோஜ்குமார் தாக்கூர் தலைமையில் ஒரு சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது. சிறுமி பாலியல் வழக்கில் 16 வயது சிறுவன் மற்றும் சதீஷ் என்ற இளைஞர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருந்தனர். இந் நிலையில், இந்த வழக்கில் திடீர் திருப்பமாக அதிமுகவைச் சேர்ந்த தென் சென்னை வடக்கு (மேற்கு) மாவட்டம், அண்ணா நகர் மேற்கு பகுதியைச் சேர்ந்த 103 வட்டச் செயலாளர் சுதாகர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு ஆதரவாகச் செயல்பட்டு, அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க முயற்சி செய்ததன் அடிப்படையில் போலீஸார் அவரை கைது செய்தனர்.

சிறுமி வன்கொடுமை வழக்கை முதலில் விசாரித்த அண்ணா நகர் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ராஜியையும் போலீஸார் கைது செய்தனர். இவர் இந்த வழக்கை முறையாக விசாரிக்கவில்லை என்பதாலும், குற்றஞ்சாட்டப்பட்ட நபரை புகாரிலிருந்து விடுவிக்க பணம் பெற்றதோடு, புகார்தாரர் தரப்பினரைத் தாக்கியதாகவும் எழுந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.


இருவரையும் வரும் 21ம் தேதிவரை நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்க எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில், சிறையில் அடைக்கப்பட்ட காவல் ஆய்வாளர் ராஜியை பணியிடை நீக்கம் செய்து காவல் ஆணையர் அருண் நேற்று உத்தரவிட்டார்.

## ஹெச்எம்பிவி தொற்றுக்கு பிரத்யேக சிகிச்சை இல்லை: 3-6 நாளில் தானாக சரியாகிவிடும் என சுகாதார அமைச்சர் விளக்கம்

சென்னை, ஜன.10

ஹெச்எம்பிவி தொற்றுக்கு பிரத்யேக சிகிச்சையோ, மருந்தோ இல்லை. 3 முதல் 6 நாட்களில் தானாகவே சரியாகிவிடும் என்று சட்டப் பேரவையில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று ஹெச்எம்பி வைரஸ் தொற்று குறித்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தில் விவாதம் நடைபெற்றது. இதை தொடர்ந்து சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில் அளித்து பேசியதாவது: ஹெச்எம்பி வைரஸ் தொற்று 50 ஆண்டுகளுக்கு முன்பு கண்டறியப்பட்டது. 2001ம்



ஆண்டிலும் இந்த வைரஸ் தொற்று கண்டறியப்பட்டிருக்கிறது. குளிர்காலம், இளவேனில் காலங்களில் இந்த வைரஸ் பரவக்கூடும். இந்த நோய்க்கான அறிகுறிகள் சளி, காய்ச்சல், இருமல், சுவாச பாதிப்புகள். இந்த வைரஸ் பாதிப்பு குணமாக 3 முதல் 6 நாட்கள் வரை ஆகும்.

இணைநோய் உள்ளவர்கள் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டால் ஓரளவு தீவிரத்தன்மை அடைந்து நுரையீரல் பாதிக்கப்படும். 2024ல் 714 பேருக்கு பரிசோதனை செய்ததில் பலருக்கு இந்த நோய் பாதிப்பு இருந்தது. தமிழகத்தில் சென்னை, சேலத்தில் இருவர் நோயால் பாதிக்கப்பட்டு கண்காணிப்பில் உள்ளனர். அவர்கள் நலமுடன் இருக்கிறார்கள். சுவாசநோய் தொற்றுகள் தானாகவே குணமடையும் என்பதால்தான், மருத்துவ வல்லுநர்கள் இதற்காக சிறப்பு சிகிச்சைகள் தேவை இல்லை என்கின்றனர். இந்த வைரஸுக்கு நோய் எதிர்ப்பு மருந்துகள், தடுப்பூசிகள் இல்லை. உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானியாக இருந்த சவுமியா சுவாமிநாதன், இனி வரும் காலங்களில் வைரஸ் தொற்றுகளுடன் வாழ வேண்டும் என தெரிவித்திருந்தார். அதைத்தான் நான் தெரிவித்தேன்.

இது வீரியம் மிக்க வைரஸ் அல்ல. இதற்கென பிரத்யேக மருந்துகளும் இல்லை. பிரத்யேக சிகிச்சைகளும் இல்லை. பரிசோதனைகள் செய்து கொள்ளும் அவசியமும் இல்லை. இதனால் நாம் பெரிய அளவில் பயப்பட தேவையில்லை. இதற்காக தனியாக பிரத்யேக படுக்கைவசதிகளும் தேவையில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

## மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் சமாதான கூட்டம்




மானாமதுரை ஜன.10

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்துக்கு உட்பட்ட மேலப்பசலை கிராமத்தில் காட்டு பன்றிகளால் நெற்பயிர்களை சேதப்படுத்தியதற்கு நிவாரணம் கேட்டு மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றியிடும் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம்

நடைபெறும் என அறிவித்திருந்த நிலையில் மானாமதுரை காவல்துறையினரின் பரிந்துரையின்படி மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் சமாதான கூட்டம் நடைபெற்றது

இக்கூட்டத்தில் மேலப்பசலை கிராமத்தில் சுமார் 600 ஏக்கர் விவசாய நிலத்தில் நெற்பயிர்கள் பயிரிட்டு இருந்த நிலையில் அறுவடைக்கு தயாரான நெற்பயிர்களை காட்டு பன்றிகள் கூட்டம் கூட்டமாக வந்து நெற்பயிர்களை சேதப்படுத்தியது அதனால் விவசாயிகள் வேதனை அடைந்தனர்.

இதற்கு நிவாரணம் கேட்டு விவசாயிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் அறிவித்திருந்த நிலையில் மானாமதுரை வட்டாட்சியர் மற்றும் மானாமதுரை வேளாண்மை துறை அதிகாரிகள் மாவட்ட வனத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு இக்கூட்டத்தில் விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக முடிவு எடுக்கப்பட்டது கூட்டத்தில் முடிவானது காட்டு பன்றிகளால் சேதப்படுத்தப்படுத்தியிருந்தால் வனத்துறையின் மூலம் உரிய இழப்பீடு பெற்று தருவது எனவும் வளர்ப்பு பன்றிகளால் சேதப்படுத்தி இருந்தால் பயிர் காப்பீடு மூலம் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய இழப்பீடு பெற்று தருவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

மானாமதுரை காவல்துறையினர் மற்றும் மேலப்பசலை கிராம விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி 9th பட்டாலியன் பள்ளி மற்றும் கல்லூரி தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு இறுதியாண்டு முகாமில் மாணவர்களுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி நேற்று வழங்கப்பட்டது.இதில் அணிவகுப்பு, துப்பாக்கி சுடுதல், கலை, சமூக செயல்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டவர்கள் மண்டல அளவிலான போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட உள்ளனர். அதில் தேர்வாகும் வீராங்கனைகள் ஜனவரி மாதம் குடியரசு தினவிழா ஒத்திகைக்கு தகுதி பெறுவார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஜன09) குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும், இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து திண்டுக்கல் மாவட்டம் பழனி நகர ஏழாவது வார்டு நியாய விலை கடையில் சார் ஆட்சியர் கிஷன் குமார் நகர்மன்றத் தலைவர் உமா மகேஸ்வரி. ஏழாவது வார்டு கவுன்சிலர் சுரேஷ். நகர் மன்ற உறுப்பினர் இந்திரா திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலையில் நியாய விலைக் கடையில் பொங்கல் சிறப்பு பரிசு தொகுப்பினை பொது மக்களுக்கு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டல குழு கூட்டம் காமராஜபுரம் உள்ள மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது இதில் 3வது மண்டல குழு தலைவர் ஜெயபிரதீப் சந்திரன் அவர்கள் தலைமையில் மற்றும் தாம்பரம் மாநகராட்சியின் துணை ஆணையாளர் அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஜன09) சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம், சைதாப்பேட்டை, சின்னமலை நியாய விலைக் கடையில் அரசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும், இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்ததை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டம்,குமாரகிரி ஊராட்சி,கூட்டாம்புளி நியாய விலைக் கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், இ.ஆ.ப., பொங்கல் சிறப்பு பரிசு தொகுப்பினை பொதுமக்களுக்கு வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராஜேஷ் மாவட்ட வழங்கல் அலுவலர் .உஷா ஆகியோர் உடன் உள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 24 செல்லம்மாள் காலனியில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் கட்டுமான பணிகள் குறித்து ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். உடன் தலைமை பொறியாளர் (பொ) செல்வநாயகம், உதவி செயற்பொறியாளர் முனியாண்டி மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தேனி மாவட்டம் மக்கள் தொடர்பு முகாமில் 80 பயனாளிகளுக்கு ரூ.2.76 கோடிமதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிய ஆட்சியர்



தேனி, ஜன.10

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், ராசிமலை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 80 பயனாளிகளுக்கு ரூ.2,76,12,704/ மதிப்பிலான பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா, வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது, தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக அரசுத்துறை அலுவலகங்களுக்கு நேரில் சென்று அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி வரும் நிலையினை மாற்றி, மாதம் ஒருமுறை மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு கிராமத்தினை தேர்ந்தெடுத்து அனைத்து துறை அலுவலர்களும் மக்களைத் தேடி, நேரில் சென்று பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று அதற்கு தீர்வுகாணும் வகையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் கள் நடத்தப்படுகின்றது. அனைவரும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்ட அட்டை வைத்திருப்பது அவசியமாகிறது. தங்களது குடும்ப உறுப்பினர்களில் எவருக்கேனும் மருத்துவ மேல் கிசிக்சை தேவைப்படும் பொழுது முன்பணமின்றி இத்திட்டத்தின் மூலமாக தரமான சிகிச்சை பெற முடியும். இன்றையதினம் நடைபெறும் முகாமில் மருத்துவ காப்பீடு திட்ட அட்டை பெறுவதற்கு இப்பகுதிமக்கள் விண்ணப்பிக்கலாம்.

பெறப்படும் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு காப்பீடு திட்ட அட்டைகள் வழங்கப்படும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு முறையாக தடுப்பூசி செலுத்த வேண்டும். அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி கற்பிக்கப்படுவதுடன், குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு, எடைக்குறைவு இருப்பின் அதனை சரிசெய்வதற்காக சத்துணவு, சத்துமாவு உள்ளிட்ட உணவுப்பொருள் வழங்கப்படுகிறது.எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தொடர்ச்சியாக அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்ப வேண்டும். மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, மாணவர்களின் கல்வி தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும், கல்வி உதவித்தொகைகளும் அரசால் வழங்கப்படுகிறது. குழந்தை திருமணத்தை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். அரசு நிர்ணயித்துள்ள 18 வயது பூர்த்தி அடைந்த பின்னரே, பெண்களுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர்கள் உறுதி கொள்ள வேண்டும். பெண்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் விதமாக தமிழ்நாடு அரசின் சார்பில் மாதந்தோறும் ரூ.1000/ வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாணவர்களுக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி ஊக்கத்தொகையாக மாதந்தோறும் ரூ.1000/ வழங்கப்படுகிறது. மேலும், வங்கி கடனுதவியும் வழங்கப்பட்டு வருகிறது. இதனை மாணவர்கள் பயன்படுத்தி தங்கள் உயர் கல்வியினை முழுமையாக நிறைவு செய்ய வேண்டும்.தற்பொழுது கைவினை கலைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கிடும் நோக்கில் கலைஞர் கைவினைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கைவினை கலைஞர்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் உதவியும், தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கப்பட உள்ளது. இதற்கு தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம். குறிப்பாக சுயதொழில் புரிவதற்காக பல்வேறு திட்டங்களின் கீழ் கடனுதவி பெற்றவர்கள், பெற்ற கடனை முழுவதுமாக திருப்பி செலுத்த வேண்டும். இம்முகாமில் பல்வேறு துறைகளின் திட்ட விளக்க கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அரசின் திட்டங்கள் குறித்து அலுவலர்களிடம் நேரடியாக கேட்டுத் தெரிந்துக் கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இன்றைய தினம் நடைபெற்ற முகாமில், வருவாய் துறையின் சார்பில், பட்டா மாறுதல் 11 நபர்களுக்கும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் புதிய குடும்ப அட்டை 6 நபர்களுக்கும், மாற் றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் தலா ரூ.16,199/ மதிப்பிலான ஸ்மார்ட் போன் 4 நபர்களுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் மானிய விலையில் ரூ.2,538/ மதிப்பிலான மண்புழு உரப்படுகை 1 நபருக்கும் மற்றும் ரூ.995/ மதிப்பிலான பசுந்தாள் உர விதைகள் 1 நபருக்கும், தோட்டக் கலைத்துறையின் சார்பில் மானிய விலையில் ரூ.24,375/ மதிப்பிலான ஏலக்கி வாழை விதைகள் 1 நபருக்கும், மற்றும் ரூ.20,000/ மதிப்பிலான பாரம்பரிய காய்கறி விதைகள் 1 நபருக்கும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின் கீழ் தலா ரூ.5 இலட்சம் மதிப்பிலான காப்பீடு அட்டைகள் 55 நபர்களுக்கும் என மொத்தம் 80 பயனாளிகளுக்கு ரூ. 2,76,12,704/ மதிப்பிலான பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளையும், 184 நபர்களுக்கு இணையவழி சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு புத்தாண்டு மற்றும் பொங்கல் நல் வாழ்த்துகளை தெரிவித்ததைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்தார்.இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ஜெயபாரதி, பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத் பீடன், தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி.) சாந்தி, இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கலைச்செல்வி, உதவி இயக்குநர் (நில அளவை) .அப்பாஸ், உதவி இயக்குநர் (மாவட்ட தொழில் மையம்) .மோகன்தாஸ், முன்னோடி வங்கி மேலாளர் .விஜயசேகர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் .வெங்கடாசலம், மாவட்ட வழங்கல் அலுவலர் மாரிசெல்வி, மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளாதேவி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ராஜராஜேஸ்வரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்காமாட்சி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வி சந்தியா, தாட்கோ மேலாளர் சரளா, வட்டாட்சியர் .மருதுபாண்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை நகராட்சிக்கு உட்பட்ட நியாயவளக்கடையில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கிய மாவட்ட ஆட்சியர்



சிவகங்கை ஜன.10

சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 4,17,664 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் இலவச வேஷ்டி, சேலை வழங்கும் நிகழ்வினை, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் தமிழர் திருநாள் தைப்பொங்கலை முன்னிட்டு, அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை நேற்று (09.01.2025) சென்னை சைதாப்பேட்டை சின்னமலை நியாயவிலைக் கடையில் வழங்கி தொடங்கி வைத் துள்ளதைத் தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 4,17,664 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்வினை, மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித்,சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட நியாயவிலைக் கடையில் தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழக முதலமைச்சர் அறிவிப்பின்படி, தமிழர் திருநாள் தைப்பொங்கல் 2025ஐ தமிழர்கள் சிறப்பாக கொண்டாடிடும் வகையில் நியாய விலைக் கடைகள் மூலம் அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும், பொங்கல் பரிசாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, ஒரு முழுநீளக் கரும்பு மற்றும் இலவச வேஷ்டி சேலை வழங்கிட ஆணையிடப்பட்டு,

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில், பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கி தொடங்கி வைத்துள்ளதைத் தொடர்ந்து, தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட வுள்ளது.

அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மூலம் 638 முழுநேர நியாய விலைக் கடைகளும், 166 பகுதி நேர நியாயவிலைக்கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 25 முழுநேர நியாயவிலைக் கடைகளும் ஆக மொத்தம் 829 நியாயவிலைக்கடைகளின் வாயிலாக, மாவட்டத்தில் 4,16,597 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் 1,067 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்கள் என ஆக மொத்தம் 4,17,664 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் நிகழ்வு, நேற்றைய தினம் சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட நியாயவிலைக்கடையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைதாரர்கள் எவ்வித சிரமமுமின்றி பொங்கல் பரிசுத்தொகுப்பு பெறுவதற்கென, சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குட்பட்ட நியாய விலைக் கடைகளின் வாயிலாக, குறிப்பிட்டுள்ள தேதிகளில் பொதுமக்களுக்கு வழங்கிடும் பொருட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. தங்களுக்கு குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் சூழ்நிலையின் காரணமாக வர இயலாதவர்கள் 13.01.2025 ஆம் தேதி அன்று சம்பந்தப்பட்ட நியாயவிலைககடைகளின் வாயிலாக பெற்றுக் கொள்ளலாம். இதனை கருத்தில் கொண்டு, கூட்ட நெரிசலைத் தவிர்த்து, தங்களுக்கான பொங்கல் பரிசு தொகுப்பினை எவ்வித சிரமமுமின்றி பெற்று பயனடைய வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் இராஜேந்திர பிரசாத், சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.எம்.துரைஆனந்த், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், துணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) பாபு, மாவட்ட வழங் கல் அலுவலர் சபிதாள் பேகம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை கீழப்பூங்குடி கிராமத்தில் புகைப்படக் கண்காட்சி



சிவகங்கை ஜன.10

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழப்பூங்குடி கிராமத்தில், நேற்று (ஜன09) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன.

மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெறவேண்டும்.

# இறச்சகுளம் பகுதியில் ரூ.90 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் தார்சாலை பணியினை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

கன்னியாகுமரி ஜன10



கன்னியாகுமரி மாவட்டம் இறச்சகுளம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் மாநில நெடுஞ்சாலை துறையின் சார்பில் நடைபெற்று வரும் சாலை மேம்பாட்டு பணியினை மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, நேற்று (ஜன 09) ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையிலான தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டிற்குட்பட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் முதலமைச்சரின் கிராம சாலைகள் திட்டம், விரிவான சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் வாயிலாக பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை அறிவித்தும் அதற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொண்டு சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதனடிப்படையில் இறச்சகுளம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் விரிவான சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 20242025ன் கீழ் ரூ.90 இலட்சம் மதிப்பில் இறச்சகுளம் முதல் துவரங்காடு வரை 1.6 கி.மீட்டர் நீளத்திலும், 7 மீட்டர் அகலத்திலும் சாலையை விரிவாக்கி, தார்சாலை அமைக்கப்பட்டு வரும் பணியினை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, இத்தார்சாலையின் தரத்தினை ஆய்வு செய்யப்பட்டு, விளக்கம் கேட்டறியப்பட்டதோடு, சாலை தரமானதாக இருக்கவும், பணியினை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்.

நடைபெற்ற நெடுஞ்சாலைத் துறை உதவி பொறியாளர் அரவிந்த், சாலை ஆய்வாளர் அருள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 5,77,849 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்புகளை வழங்கி தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சியர்

கன்னியாகுமரி ஜன10



கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் கம்பளம் நியாய விலைக்கடை மற்றும் தோவாளை வட்டம் கீரிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட வாழையத்து வயல் நியாயவிலைக்கடை மற்றும் லாயம் ஊராட்சிக்குட்பட்ட லாயம் நியாயவிலைக்கடை ஆகியவற்றில் வழங்கப் பட்டு வரும் சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகு மீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் நகர பகுதிகள் முதல் கடைகோடி கிராம பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறார்கள். அதன் ஒருபகுதியாக உலகத்தமிழர்கள் அனைவராலும் கொண்டாடப்படும் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியை நேற்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 121 கூட்டுறவு நிறுவனங்களின் கீழ் செயல்படும் 581 நியாய விலைக் கடைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் கீழ் செயல்படும் 135 நியாய விலைக்கடைகள், இதர கூட்டுறவின் கீழ் செயல்படும் 46 நியாய விலைக்கடைகள், சுயஉதவிக்குழுவால் நடத்தப்படும் 3 நியாய விலைக் கடைகள் என மொத்தம் 765 நியாய விலைக்கடைகளில் இணைக்கப்பட்டுள்ள 5,77,849 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு இன்றிலிருந்து தொடர்ந்து நான்கு நாட்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட உள்ளது.

குடும்ப அட்டைத்தாரர்களுக்கு வழங்கும் பொங்கல் பரிசுத்தொகுப்பில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் முழுக்கரும்பு வழங்கப்படுகிறது. கூடுதலாக குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச வேட்டி, சேலையும் வழங்கப்படுகிறது. அதனைத்தொடர்ந்து நேற்று அகஸ்தீஸ்வரம் வட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார் கம்பளம் நியாயவிலைக்கடை மற்றும் தோவாளை வட்டம் கீரிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட வாழையத்துவயல் நியாய விலைக்கடை மற்றும் லாயம் ஊராட்சிக்குட்பட்ட லாயம் நியாயவிலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசு வழங்குவதற்காக அவர்களின் மின்னணு குடும்ப அட்டைகளை எவ்வாறு சரிபார்க்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு பொங்கல் தொகுப்பு மற்றும் வேட்டி சேலைகள் வழங்கப்படு கிறது என்ற செயல்முறை விளக்கத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஒவ்வொரு நியாய விலைக்கடைகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை கேட்டறியப்பட்டதோடு, அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்குவதற்காக இருப்பு வைக்கப்பட்டுள்ள பச்சரிசி, கரும்பு, சர்க்கரை மற்றும் வேட்டி சேலைகள் ஆகிய வற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து பொங்கல் பரிசுத் தொகுப்பு பெற வருகை தந்துள்ள பொதுமக்களிடம் குறைகள் கேட்டறியப்பட்டதோடு, பொதுமக்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்.

# ஜெயங்கொண்டம் அரசினர் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் வட்டார அளவிலான வினாடி வினா போட்டிகள்

ஜெயங்கொண்டம் ஜன.10



அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அரசினர் மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணரும் வகையில் தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள கல்வி இணை செயல்பாடுகளில் ஒன்றான வினாடி வினா சார்ந்த போட்டிகள் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் சிவானந்தம் வழிகாட்டுதலின்படி அரியலூர் மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின் சார்பாக வட்டார அளவில் இன்று நடைபெற்றது.

ஜெயங்கொண்டம் அரசினர் மாதிரி மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தவிக்குமார் தலைமை வகித்து வாழ்த்துரை வழங்கினார். வினாடி வினா போட்டியினை வட்டார கல்வி அலுவலர் ராசாத்தி வாழ்த்துரை வழங்கி போட்டியினை துவங்கி வைத்தார்கள்.

முன்னதாக வட்டார வள மேற்பார்வையாளர் கண்ணதாசன் வரவேற்றார். ஆசிரிய பயிற்றுனர்கள் குறிஞ்சிதேவி, ஐயப்பன், அந்தோணிலூர்து சேவியர், இளையராஜா, தாமோதரன், கார்த்திகேயன், செந்தில், டேவிட் ஆரோக்கியராஜ் மற்றும் சுகன்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போட்டிகளின் நடுவர்களாக புதுச்சாவடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அறிவியல் பட்டதாரி ஆசிரியர் செங்குட்டுவன் ஜெயங்கொண்டம் அரசினர் மாதிரி மேல் நிலைப்பள்ளி அறிவியல் பட்டதாரி ஆசிரியர் பிரகாஷ் பாத்திமா பெண்கள் மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியர் ஜெய் காந்தி மகிமைபுரம் மேல்நிலை பள்ளி முதுகலை ஆசிரியர் பியூலாலில்லி புஷ்பம் ஆகியோர் செயல்பட்டனர்.

வினாடி வினா போட்டிகள் பள்ளி மாணவர்களுக்கான தேன்சிட்டு இதழ்களுக்கான பிரிவில் த.பொட்டக்கொல்லை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் தேவா ஹரிணி ஆகியோர் முதலிடத்திலும்

மேலக்குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் அர்ச்சனா பிரபாகரன் ஆகியோர் இரண்டாம் இடத்திலும் வானவநல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் ஷர்மிளா யாஷிகா ஆகியோர் மூன்றாம் இடத்திலும் வெற்றி பெற்றனர்.

பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்வுகள் பிரிவிலிருந்து உடையார்பாளையம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் இந்துஜா காயத்ரி ஆகியோர் முதலிடத்திலும்

இரவாங்குடி அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ஆரோக்கியராஜ் தேவேந்திரன் ஆகியோர் இரண்டாம் இடத்திலும் ஜெயங்கொண்டம் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சஞ்சனா அனுஷ்கா ஆகியோர் மூன்றாம் இடத்திலும் வெற்றி பெற்றனர்.

மேல்நிலை உயர்நிலை மற்றும் நடுநிலை சார்ந்த 22 பள்ளிகளில் இருந்து 44 மாணவ மாணவியர் கலந்துகொண்டு தங்கள் திறமைகளை வெளிக் காட்டினர்.

முதல் மற்றும் இரண்டாம் இடத்தில் வெற்றி பெற்ற மாணவர்கள் அரியலூரில் நடைபெறும் மாவட்ட அளவிலான போட்டியில் கலந்துகொள்வார்கள். வட்டார ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் பயிற்றுநர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.

# ராமநாதபுரத்தில் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள வலியுறுத்தி சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்த ஆட்சியர்

ராமநாதபுரம் ஜன10




ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று போக்குவரத்துத் துறையின் மூலம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சி நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையேற்று காவல்துறை மற்றும் போக்குவரத்துத்துறையின் மூலம் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தலைக்கவசம் அணிந்து இருசக்கர வாகனம் மூலம் விழிப்புணர்வு மேற்கொள்ளும் பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழகத்தில் சாலை பாதுகாப்பு விழா ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் 2025ஆம் ஆண்டுக்கான சாலை பாதுகாப்பு மாத விழா 01.01.2025 முதல் 31.01.2025 வரை நடைபெறுகின்றன. அதனையொட்டி நேற்று இரு சக்கர வாகனம் மூலம் பாதுகாப்பான பயணம் குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெறுகிறது. இதன் நோக்கம் விபத்தில்லா சாலை பயணம் அமைய வேண்டும் என்பதேயாகும்.

இப்பேரணையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ் தலைமையில் காவல்துறையினர் மற்றும் போக்குவரத்துத்துறை பணியாளர்கள் தலைக்கவசம் அணிந்து இருசக்கர வாகனம் மூலம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று பொதுமக்கள் பார்த்து பயன்பெறும் வகையில் சாலை பாதுகாப்பின் அவசியம் குறித்தும், இரு சக்கர வாகன ஓட்டுநர்களுக்கு தலைக்கவசம் மிக முக்கியம் என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பேரணி நிறைவாக பாரதிநகர் அம்மா பூங்கா வளாகத்தை வந்தடைந்தன.

மேலும் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுகள் வானொலி மூலமாக ஒளி பரப்பப்பட்டு வருவதுடன் கைபேசி வாயிலாக குறுஞ் செய்தி அனுப்பப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சாலை பயணத்தின் போது ஏற்படும் விபத்துகளில் மனித உயிர்களை காப்பாற்ற தமிழக அரசு ‘108’ அவசரகால ஆம்புலன்ஸ் வாகனங்கள் சேவையால் பெருமளவு உயிரிழப்புகள் தடுக்கப்படுகின்றன.

இதுமட்டுமின்றி சாலைகளில் நடக்கும் போக்குவரத்து விதி மீறல்களை கண்டறிய சிறப்பு தணிக்கைகள் காவல் துறை மற்றும் போக்குவரத்துத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு சாலை விதிகளை மீறும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் வாகனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சரின் ‘இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 “என்ற சீர்மிகு திட்டம் செயல்படுத்தப்பட்டு விபத்து காலங்களில் மனித உயிர்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எனவே வாகன ஓட்டுநர்கள் மட்டுமின்றி சாலையில் செல்பவர்களும் விதிமுறைகளை முழுமையாக கடைப்பிடித்து விபத்தில்லா இராமநாதபுரம் மாவட்டம் என்ற நிலையை அடைய அனைவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வட்டார போக்குவரத்து அலுவலர் சேக் முகமது வட்டார போக்குவரத்து ஆய்வாளர்கள் செந்தில் குமார் அவர்கள், பத்மபிரியா மற்றும் அரசு அலுவலர்கள், ஓட்டுநர் பயிற்சி பள்ளி நிறுவனர்கள், புதிய வாகன விற்பனையாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பழனி பகுதிகளில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்ல ஆலைகளை ஆய்வு செய்த அதிகாரிகள்

பழனி ஜன10





திண்டுக்கல் மாவட்டம் பழனியில் பொங்கல் பண்டிகை முன்னிட்டு நெய்க்காரப்பட்டி பாப்பம்பட்டி அய்யம்பாளையம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள வெல்ல ஆலைகளை மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் கலைவாணி தலைமையில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சரவணகுமார் மற்றும் ஜஸ்டின் அமல்ராஜ் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வில் கலப்படத்திற்காக வைக்கப்பட்டிருந்த 500 கிலோ சீனி பறிமுதல் செய்யப்பட்டது ஐந்து உணவு மாதிரிகள் எடுத்து ஆய்வுக்கு அனுப்பப்பட்டது சுத்தமாகவும் சுகாதாரமும் இல்லாத ஆலைகளுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது அனைத்து ஆலைகளிலும் சிசிடிவி கேமரா பயன்பாட்டில் இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடப்பட்டது.

# தென்காசி நியாய விலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கிய மாவட்ட ஆட்சியர்

தென்காசி ஜன10



தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர்.ராணி ஸ்ரீகுமார் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர், வழங்கினார். பின்னர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது,

தமிழர் திருநாளாம் தைத்திரு நாளை தமிழக மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் 1 முழுக்கரும்பு ஆகியவை பொங்கல் பரிசு தொகுப்பாக வழங்க தமிழக முதலமைச்சரால் ஆணையிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நேற்றைய தினம் தென்காசி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை நடத்தும் வீட்டு வசதி வாரிய நியாய விலைக் கடையில் தலா ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை, முழுகரும்பு மற்றும் வேட்டி, சேலை ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளது. தென்காசி மாவட்டத்தில் உள்ள 658 நியாய விலைக்கடைகளில் இணைக்கப்பட்டுள்ள 4,74,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் 178 குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும். பொங்கல் பரிசு தொகுப்பை பொதுமக்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள டோக்கன்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் குடும்ப அட்டையில் உள்ள நபர்களில் ஒருவர் பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுச் சங்கங்களின் தென்காசி மண்டல இணைப்பதிவாளர் கு. நரசிம்மன், முதுநிலை மண்டல மேலாளர் ரியாஜ் அகமது, தென்காசி நகர்மன்ற தலைவர் ர.சாதிர், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அனிதா, துணைப்பதிவாளர்கள் செல்வி.பா.பூர்விசா, ப.கோபிநாத், கூட்டுறவு சார்பதிவாளர்கள் மு.மாரியப்பன், இரா.ஸ்ரீவித்யா, பண்டக சாலை செயலாட்சியர் இரா. இராஜ், மேலாளர் மாரியப்பன் மற்றும் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.57 ஆரப்பாளையம் டிடி.ரோடு பகுதியில் உள்ள நியாயவிலைக்கடையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை மேயர் இந்திராணி பொன்வசந்த் வழங்கினார் அருகில் மண்டலத் தலைவர் .பாண்டிச்செல்வி உடன் உள்ளார்.

# எழும்பூர் குழந்தை நல மருத்துவமனைக்கு ரூ.8 லட்சம் மதிப்பிலான இலவச ஆம்புலன்ஸ்

சென்னை ஜன 10



எழும்பூர் குழந்தை நல மருத்துவமனைக்கு பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை சார்பில் ரூ.8 லட்சம் மதிப்பிலான இலவச ஆம்புலன்ஸ் வழங்கப்பட்டது.

சென்னை எழும்பூர் குழந்தைகள் மற்றும் பெண்கள் சிறப்பு மருத்துவமனையில் சிகிச்சைக்காக வருபவர்கள் மற்றும் சிகிச்சை பெற்று வருபவர்கள் மேல்சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு செல்வோர் பயன்பாட்டிற்காக பெண்கள் முன்னேற்றம் அறக்கட்டளை சார்பில் ரூ.8.50 லட்சம் மதிப்பிலான இலவச ஆம்புலன்ஸ் அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் WLF எனப்படும் பெண்கள் முன்னேற்ற அறக்கட்டளை நிர்வாகிகள் இலவச ஆம்புலன்ஸ் சாவியை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை கண்காணிப்பாளரிடம் வழங்கினர்.

பெண்கள் முன்னேற்றத்திற்காக இயங்கி வரும் women's league foundation எழும்பூர் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் நபர்கள் எளிதில் மருத்துவமனைக்கு வந்து செல்லும் வகையில் இந்த இலவச ஆம்புலன்ஸ் சேவையை தொடங்கி இருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# தேனி மாவட்டம் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு சர்வதேச விமான நிலையத்தில் பணிபுரிய பயிற்சி



தேனி ஜன10

தேனி மாவட்டம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) நிறுவனமானது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் சர்வதேச விமான நிலையத்தில் பணிபுரிய சர்வதேச விமான போக்குவரத்தால் (IATA-CANDA) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால், விமான நிலைய பயணிகள் சேவை அடிப்படை படிப்பு (Air Cargo Introductory + DGR) சரக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி அடிப்படை படிப்பு (Passenger Ground Services + Reservation Ticketing) சுற்றுலா துறையின் அடிப்படை படிப்புகள் மற்றும் விமான பயண முன்பதிவு (Foundation in Travel and Tourism) போன்ற பிரிவுகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது. மேலும், வேலைவாய்ப்பு பெற வழிவகை செய்யப்படும்.

இப்பயிற்சி பன்னிரெண்டாம் வகுப்பு அல்லது பட்டப்பிடிப்பில் தேர்ச்சிபெற்ற 18 முதல் 23 வயது நிரம்பிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்தவர்களுக்கு அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சிக்கான கால அளவு ஆறுமாதமும் விடுதியில் தங்கி படிக்க வசதியும், பயிற்சிக்கானசெலவீன தொகையாக ரூ.95,000/ தாட்கோவால் மேற்கொள்ளப்படும்.


இப்பயிற்சியினை வெற்றிகரமாக முடிக்கும் பட்சத்தில் IATA- International Air Transport Association – Canda மூலம் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். மேலும், தனியார் விமான நிறுவனங்களிலும் (Indigo., Airlines, Spice Jet, Go First, Air India) சரக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிறுவனங்களிலும், நட்சத்திர விடுதிகளிலும், சொகுசு கப்பல் மற்றும் சுற்றுலா துறையிலும்வேலைவாய்ப்பு பெறலாம் .

ஆரம்பகால மாதாந்திர ஊதியமாக ரூ.20,000/ முதல் ரூ.22,000/வரை பெறுவதற்கு வழிவகை செய்யப்படும். பின்னர் திறமைக்கேற்றவாறு பதவி உயர்வின் அடிப்படையில் ரூ.50,000/ முதல்ரூ.70,000/ ஊதிய உயர்வு பெறலாம்.

இத்திட்டத்தில் பயிற்சி பெறுவதற்கு www.tahdco.com என்ற தாட்கோ இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்கள் அறிய மாவட்ட மேலாளர், தாட்கோ, அறை எண்.73, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தேனி. அவர்களை நேரிலோ அல்லது 0454 6260995 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா. தெரிவித்துள்ளார்.




மதுரை மாவட்டம் ஒத்தக்கடை நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு அரசின் பொங்கல் பரிசு தொகுப்புகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சு.சதிஷ்குமார்ஆகியோர் உடன் உள்ளனர்.





மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் அழகர்கோயில் கோட்டைவாசல் கிராம பொதுமக்களை நேரடியாக சந்தித்து டங்ஸ்டன் தொடர்பாக தமிழ்நாடு அரசின் நிலைபாடு குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி உரையாற்றினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அர்விந்த், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் , உதவி ஆட்சியர்(பயிற்சி) வைஷ்ணவிபால், ஆகியோர் உடன் உள்ளனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (ஜன 09) குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும், இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 60வது வட்டத்தில் இரும்புலியூர் மற்றும் ஏரிக்கரை பகுதியில் அமைந்துள்ள நியாய விலை கடைகளில் பொங்கல் தொகுப்பினை திமுக வட்டக கழக செயலாளர் ஆர்.சஞ்சீவி மற்றும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விக்கி (எ) விக்னேஸ்வரன் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் வட்ட பிரதிநிதி த.நேரு, கோ.ராஜன், த.ஜீவானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தேவகோட்டை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.22.32 இலட்சம் மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவி





தேவகோட்டை ஜன10

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி கண்ணதாசன் மணி மண்டபத்தில் தேவகோட்டை வட்டளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந்தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாதத்தில் கடைசி வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதிசெய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சியர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் ஏ.1012 கூத்தலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் 16 பயனாளிகளுக்கு ரூ. 21,95,700/ மதிப்பீட்டிலான மகளிர் சுயஉதவிக்குழு கடனுதவி, பயிர் கடனுதவி, கால்நடை பராமரிப்பு கடனுதவி ஆகிய கடனுதவிக்கான ஆணைகளையும், சாக்கோட்டை வட்டாரத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் சார்பில் 01 விவசாயிக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் ரூ.12,000/ மதிப்பீட்டிலான மாமென்தண்டு இடுபொருள், 02 விவசாயிகளுக்கு கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பரப்பு விரிவாக்கத்தின் படி ரூ.7,498/ மதிப்பீட்டிலான வெண்டை விதை இடுபொருள்களையும், 02 விவசாயிகளுக்கு மாநில தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.11,000/ மதிப் பீட்டிலான இடு பொருட்களையும், வேளாண்மைத் துறையின் சார்பில் 01 விவசா யிக்கு ரூ.6,000/ மதிப்பீட்டிலான தெளிப்பான், 04 விவசாயிகளுக்கு பல்வேறு வகையான வேளாண் இடு பொருட்களையும் என ஆக மொத்தம் 26 விவசாயிகளுக்கு ரூ.22,32,198/ மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் உமா மகேஸ்வரி, வேளாண்மை துறையின் இணை இயக்குநர் சுந்தர மகாலிங்கம் மற்றும் துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் உட்பட பல்வேறு துறையை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிவகங்கையில் ஆற்றல் மன்றங்களில் நடைபெற்ற போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு பரிசளிப்பு விழா





சிவகங்கை ஜன10

சிவகங்கை மாவட்டத்தில் மத்திய திறனூக்க செயலகம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கை மின் பகிர்மான வட்டம் இணைந்து நடத்திய 30 ஆற்றல் மன்றங்களில் தேசிய மின் சிக்கன வார விழாவை முன்னிட்டு பள்ளி அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழா சிவகங்கை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வளாக கூட்டரங்கில் நடைபெற்றது.

விழாவில் சிவகங்கை மின் பகிர்மான வட்டத்தின் மேற்பார்வை பொறியாளர் ரெஜினா ராஜகுமாரி தலைமை வகித்தார். செயற்பொறியாளர் வீரமணி செயற்பொறியாளர் முருகையன் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம் முன்னிலை வகித்தனர். சிவகங்கை மாவட்ட ஆற்றல் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி வரவேற்புரை ஆற்றினார். சிவகங்கை முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து மாவட்டக் கல்வி அலுவலர் இடைநிலை மாரிமுத்து பரிசுகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார். முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் சம்பத்குமார் நடேசன் மாவட்ட உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயூ வாழ்த்துரை வழங்கினார்கள். உதவி பொறியாளர் செல்வம் நன்றி கூறினார். மாவட்ட துணைச் செயலாளர் ராஜு கிளை தலைவர் மணவாளன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தனர். வானவில் மன்ற கருத்தாளர்கள் லலிதா நீலயாதாட்சி விழா ஏற்பாடுகளை செய்தனர்.

அரசு மேல்நிலைப் பள்ளிகள் திருப்புவனம் எஸ் எஸ் கோட்டை திருக்கோஷ்டியூர் தமறாக்கி அனுமந்தகுடி சிங்கம்புணரி பூலாங்குறிச்சி சக்கந்தி திருமாஞ்சோலை மருதுபாண்டியர் நகர் சிவகங்கை திருப்பத்தூர் திருப்பாச்சேத்தி நெற்குப்பை சாலைக்கிராமம் அரசு உயர்நிலைப் பள்ளிகள் காளாபூர் கோவிலூர் மணலூர் கல்லல் பூவந்தி இளையான்குடி கீழக்கண்டனி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளி காரைக் குடி மு சித மு சிதம்பரம் செட்டியார் மேல்நிலைப்பள்ளி கானாடுகாத்தான் தே பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி தேவகோட்டை விசாலட்சி தியாகராஜர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆ. தெக்கூர் சா. இராம மேல்நிலைப்பள்ளி நாட்டரசன் கோட்டை சுவாமி விவேகானந்தா உயர்நிலைப்பள்ளி சிவகங்கை எல் எப் ஆர் சி மேல்நிலைப்பள்ளி காரைக்குடி எஸ் எம் எஸ் வி மேல்நிலைப்பள்ளி காரைக்குடி ஓ வெ செ மேல்நிலைப்பள்ளி மானாமதுரை ஆகிய பள்ளிகளில் நடைபெற்ற பேச்சுப் போட்டி கட்டுரை போட்டி வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவி களுக்கு கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# திண்டுக்கல் மாவட்ட 6,85,629 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியை தொடங்கி வைத்த ஆட்சியர்



திண்டுக்கல் ஜன.10

திண்டுக்கல் மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியை மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, செட்டிநாயக்கன்பட்டி ஊராட்சி, வேலுநாச்சியார் வளாக குடியிருப்பு நியாயவிலைக் கடையில் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை தமிழர்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் 2025ம் ஆண்டு தைப்பொங்கலுக்கு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி மற்றும் சர்க்கரையுடன் ஒரு முழுக் கரும்பு வழங்க தமிழ் நாடு அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 1035 நியாயவிலைக்கடைகளில் 6,85,629 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது. மேலும், அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு 5,56,509 வேட்டிகள், 5,55,955 சேலைகள் வழங்கப்படவுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்தில் பொங்கல் பரிசுத் தொகுப்புகள் வழங்கும் பணி நேற்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. குடும்ப அட்டையில் உள்ள குடும்ப உறுப்பினர்களில் எவ ரேனும் ஒருவர் நியாய விலைக் கடைக்குச் சென்று பொங்கல் பரிசுத் தொகுப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம். நியாய விலைக்கடைகளில் நெரிசலை தவிர்க்கும் பொருட்டு ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களுக்கு பொங்கல் பரிசுப் பொருட்கள் வழங்கப்படவுள்ள தேதி, காலம், நேரம் குறிப்பிட்டு டோக்கன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களும் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நாள் நேரத்தின்படி நியாய விலைக்கடைகளுக்கு சென்று பொங்கல் பரிசுத் தொகுப்புகள் பெற்றுக்கொள்ளலாம், என மாவட்ட ஆட்சியர் மொ. நா.பூங்கொடி, தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் சி.குருமூர்த்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் சு.ஜெயசித்ரகலா, துணைப் பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) இரா. அன்புக்கரசன், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் ஜெய பிரகாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS" No.122, Neethipathi, Rajasekaran Street, vaarasanthai road, Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district, Editor A.PONRAJ.8508502161